# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:96** **தேதி:-21.10.2011.**

## 3Gயிலும்கொள்ளை.....21,000 கோடி!

'இந்தியாவின் மிக முக்கியமான இடங்களில் நடைபெறும் ஊழல்களின் ஊற்றுக்கண்ணாக இருப்பது பெருமுதலாளிகளே' என்ற வார்த்தைகள் மிகச் சரியானது. மத்திய ஆட்சியாளர்களால் இந்தியாவில் அமுலாக்கி வரும் புதிய தாராளமய கொள்கைகள் பெருமுதலாளிகளுக்கு மிகப்பெரும் லாபத்தை அள்ளிக் கொடுத்துள்ளது. அதற்காக அவர்கள் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அவர்களின் ஊழல் நடவடிக்கைகளுக்காக லஞ்சத்தை கொடுக்கின்றனர்.

அவர்கள் 2G ஊழலில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளோடு சேர்ந்து கூட்டுசதி செய்து நாட்டின் அரிய பொக்கிஷமான ஸ்பெக்ட்ரத்தை கொள்ளையடித்ததை நாடு முழுவதும் கண்டது.

தற்போது 3G ஏலத்திலும் ஒரு மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது என்பது நாட்டு மக்களுக்கு தெரிய வந்துள்ளது. ஏர்டெல், வோடோபோன் மற்றும் ஐடியா ஆகிய பெரும் முதலாளித்துவ நிறுவனங்களால் மீண்டும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

2010ல் 3G ஸ்பெக்ட்ரம் ஏலம் நடைபெற்றது. அதில் இந்த மூன்று கம்பெனிகளும் ஒரு கூட்டை உருவாக்கியுள்ளனர். அந்தக் கூட்டின் மூலம் இவர்கள் அனைத்து தொலைத் தொடர்பு வட்டங்களுக்குமான ஏலத்தில் பங்கேற்கவில்லை. ஆனால் அனைத்து தொலைதொடர்பு வட்டங்களிலும் இதில் ஏதாவது ஒரு கம்பெனி உரிமத்தை பெற்றுள்ளது. மொத்தமுள்ள 22 தொலைத் தொடர்பு வட்டங்களில், ஏர்டெல் நிறுவனம் 13 வட்டங்களிலும், வோடோபோன் மற்றும் ஐடியா ஆகிய நிறுவனங்கள் தலா 9 வட்டங்களிலும் உரிமங்களை பெற்றுள்ளன.

தற்போது இந்த மூன்று நிறுவனங்களும் மற்றவர்களின் வலைப் பின்னலை(Network) பயன் படுத்தி அனைத்து 22 வட்டங்களிலும் 3G சேவையை கொடுத்து வருகின்றன. இந்த நிறுவனங்கள் தாங்கள் உரிமம் பெறாத வட்டங்களிலும் கூட 3G சேவையை கொடுத்து வருகின்றன. இது சட்ட மீறலே தவிர வேறு எதுவுமில்லை.

இந்த ஏர்டெல், வோடோபோன் மற்றும் ஐடியா ஆகிய கம்பெனிகளின் கூட்டணியில் மூலம் இந்திய நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு தெரியுமா? 2010, 3G ஏலத்தின் மூலம் அனைத்து 22 மாநிலங்களுக்குமான உரிமக் கட்டணம்16,750 கோடி ரூபாய் வருகிறது. ஆனால் ஏர்டெல் நிறுவனம் 12,295 கோடி ரூபாய்களும், வோடோபோன் நிறுவனம் 11,617 கோடி ரூபாய்களும், ஐடியா நிறுவனம் வெறும் 5,254 கோடி ரூபாய்களும் மட்டுமே செலுத்தியுள்ளன. இந்த மூன்று நிறுவனங்களும் 22 தொலைத் தொடர்பு வட்டங்களுக்கும் மொத்தமாக கட்ட வேண்டிய 50,250 கோடி ரூபாய்களுக்கு பதிலாக வெறும் 29,166 கோடி ரூபாய்களை மட்டுமே செலுத்தியுள்ளன. ஆனாலும் இந்த நிறுவனங்கள் அனைத்து 22 வட்டங்களிலும் தங்களது 3G சேவைகளை கொடுத்து வருகின்றன. இவ்வாறு 21,084 கோடி ரூபாய்கள் இந்திய நாட்டிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

அரசின் கவனத்திற்கு இந்த கொள்ளை கொண்டு வரப்பட்ட பின்பும் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. அரசு இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா இல்லை காப்பாற்றுமா என்பதுதான் நமது கேள்வி.(டெலிமெஸேஜ் நவம்பர் 2011 தலையங்கத்தின் தமிழாக்கம்)

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**/S.செல்லப்பா/**
**மாநில செயலாளர்**